# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 02 | Issue: 13 | 4 Pages | 13.8.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 13 | 4 பக்கங்கள் | 13.8.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## போதைப் பொருள் தடுப்பில் சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கு பதக்கங்கள்: முதல்வர் வழங்கினார்

சென்னை, ஆக. 13

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் இன்று (12.8.2024) சென்னைப் பல்கலைக்கழகத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" நிகழ்ச்சியில், கல்லூரி மாணவ, மாணவியர்கள் போதைப்பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். மேலும், மாநிலத்தில் போதைப் பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோதக் கடத்தலை ஒழிப்பதில் சிறப்பாக பணியாற்றிய காவல் துறைஅலுவலர்கள்மற்றும்காவல் ஆளிநர்களுக்கு 2024ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர்



காவலர் சிறப்பு பதக்கங்களை வழங்கி கௌரவித்தார். மாநிலத்தில் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோத கடத்தலை ஒழிப்பதில் சிறப்பாக பணியாற்றியதற்காக 2024 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் சிறப்பு பதக்கங்களை, தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர். சிவபிரசாத், சேலம், மத்திய புலனாய்வுப் பிரிவு, காவல் ஆய்வாளர் பி. ஜகன்னாதன், சென்னை, மத்திய புலனாய்வுப் பிரிவு, சார்ஆய்வாளர் கே. ராஜ்குமார் மதுரை மாவட்டம், ஒத்தக் கடை போக்குவரத்து காவல் நிலைய சிறப்பு சார்ஆய்வாளர் ஆர். அருண், இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் காவல்நிலைய முதுநிலைகாவலர் ஆர். துரை ஆகியோருக்கு முதலமைச்சர் வழங்கி சிறப்பித்தார். மேலும் மாநிலம் முழுவதும் கைப்பற்றப்பட்ட சுமார் 13,775 கிலோ போதைப்பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் செங்கல்பட்டு, சேலம். தஞ்சை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தகுந்த பாதுகாப்புடன் எரித்து அழிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஏழை மக்கள் பணத்தில் கார் பந்தயம் தேவையா? எடப்பாடி பழனிசாமி கேள்வி



சேலம், ஆக. 13

சேலம் மாவட்டம் ஆலச்சம்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் புதியதாக கட்டப்பட்ட 4 வகுப்பறை கட்டடங்களை திறந்து வைத்தும், ரூ.72.85 லட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற பல்வேறு திட்டப்பணிகளையும் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார்.

அதன்பின்னர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:

போக்குவரத்து நெரிசல் மிகுந்த சென்னையின் மத்திய பகுதியில் ஏன் கார் பந்தயம் நடத்த வேண்டும். முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதா கொண்டுவந்த மைதானத்தில் கார் பந்தயம் நடத்தலாமே?.

விளையாட்டுத்துறை அமைச்சர் மக்கள் வரிப்பணத்தில் விளையாட்டு செய்கிறார்.

மக்கள்பிரச்சினைகளைபொருட்படுத்தாமல்கார்பந்தயத்தில்திமுக அரசு கவனம் செலுத்துகிறது. மக்கள் நடமாட்டம்அதிகமுள்ள பகுதியில் கார் பந்தயம் நடத்த வேண்டியது அவசியமா?. மக்களின் வரிப் பணத்தில் ரூ.42 கோடி செலவில் கார் பந்தயம் நடத்தப்படுகிறது. ஏழை மக்கள் பணத்தில் கார் பந்தயம் தேவையா?. மக்களின் பணம், மக்களுக்கு போய் சென்றடைய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஆசிரியர் நியமனத்தில் மாவட்ட ஒதுக்கீட்டை செயல்படுத்த வேண்டும்: டாக்டர் ராமதாஸ்

சென்னை, ஆக. 13

தமிழக அரசின் சமூக அநீதி காரணமாக பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பணி கிடைப்பதில்லை என்று டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:


தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 10 ஆயிரத்திற்கும் கூடுதலான ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதாக தெரியவந்திருக்கிறது. காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களில் 72.32 சதவீத பணியிடங்கள் வட மாவட்டங்களில் இருப்பதாக தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வந்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. கல்வி உள்ளிட்ட அனைத்து அம்சங்களிலும் வடக்கு மாவட்டங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதும், அதை அரசு வேடிக்கைப் பார்ப்பதும் கண்டிக்கத்தக்கது.

அதிக காலியிடங்கள் உள்ள முதல் 10 மாவட்டங்களில் கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, தர்மபுரி, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, சேலம் ஆகிய 7 மாவட்டங்கள் வட தமிழகத்தைச் சேர்ந்தவை ஆகும். கிருஷ்ணகிரி 892, திருவண்ணாமலை 720, தர்மபுரி 413, திருப்பத்தூர் 364, கள்ளக்குறிச்சி 325, செங்கல்பட்டு 289, சேலம் 289, கடலூர்181, திருவள்ளூர்165, ராணிப்பேட்டை 146, விழுப்புரம் 122, அரியலூர் 120, வேலூர் 94, காஞ்சிபுரம் 65 ஆகிய 14 வட மாவட்டங்களில் மட்டும் 4185 காலிப்பணியிடங்கள் உள்ளன. இது ஒட்டுமொத்த இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்களில் கிட்டத்தட்ட நான்கில் மூன்று பங்கு என்பது குறிப்பிடத்தக்கது.

அதேநேரத்தில் சென்னை, பெரம்பலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் ஒரு பணியிடம் கூட காலியாக இல்லை. இவற்றில் சென்னை, பெரம்பலூர் தவிர மீதமுள்ள 8 மாவட்டங்கள் தென் தமிழகத்தைச் சேர்ந்தவை என்பதும், இந்த மாவட்டங்கள் தான் பத்தாம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு தேர்ச்சி விகிதங்களில் முதன்மை இடங்களைப் பிடித்திருக்கின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

அதற்கு மாறாக, ஆசிரியர் பணியிடங்கள் அதிக அளவில் காலியாக இருக்கும் வட மாவட்டங்கள் தான் தேர்ச்சி விகிதத்தில் கடைசி இடங்களில் உள்ளன என்பதையும்சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் மட்டுமல்ல, பட்டதாரி ஆசிரியர், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களிலும் இதே நிலை தான் காணப்படுகிறது. இப்போது தான் என்றில்லாமல், மாவட்ட அளவிலான பணி நியமன முறை கைவிடப்பட்டு, மாநில அளவிலான பணி நியமன முறை அறிமுகம் செய்யப்பட்ட நாளில் இருந்தே வடமாவட்டங்களில் போதிய எண்ணிக்கையில் ஆசிரியர்கள் பணி புரிவது இல்லை.

கல்வியில் வட மாவட்டங்கள் புறக்கணிக்கப்படுவதற்கு தமிழக அரசும் மறைமுகமாக துணை போகிறது. தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களும் அரசுக்கு பொதுவானவை. அனைத்து



மாவட்டங்களையும் அரசு சமமாக நடத்த வேண்டும். ஆனால், தென் மாவட்டங்களில் உள்ள அரசு பள்ளிகளில் முழு அளவில் பணி புரிவதையும், அங்கு பயிலும் மாணவர்களுக்கு தடையின்றி கல்வி வழங்கப்படுவதையும் உறுதி செய்யும் அரசு, அதே அக்கறையை வட மாவட்டங்கள் மீது காட்ட மறுப்பது ஏன்? என்பதே என் வினா.

பொதுக்கலந்தாய்வின் மூலமாகவே ஆசிரியர்களுக்கு பணியிட மாறுதல் வழங்கப்படுகிறது என்று கூறி தமிழக அரசு ஒதுங்கிக் கொள்ள முடியாது. பணியிட மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படுவதற்கு முன்பாக மாநில அளவில் எத்தனை விழுக்காடு காலியிடங்கள் உள்ளனவோ, அதே அளவிலான காலியிடங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருப்பதை உறுதி செய்யும் வகையில் தான் இடமாறுதல் கலந்தாய்வு விதிகள் வகுக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் அனைத்து மாவட்டங்களிலும் ஒரே அளவில் காலி பணியிடங்கள் இருந்திருக்கும். அதைச் செய்யத் தவறியதால் தான் தென் மாவட்டங்களில் காலியிடமே இல்லாத நிலையில், வட மாவட்டங்களில் மிக அதிக காலியிடங்களும் இருக்கும் நிலை உருவாகியுள்ளது.

வட மாவட்டங்களில் ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதும், தென்மாவட்டங்களில் மிக அதிகமாக இருப்பதும் பல பத்தாண்டுகளாக தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலை மாற்றப்படாத வரை கல்வியில் வட தமிழ்நாட்டை முன்னேற்ற முடியாது. தமிழகத்தில் ஆசிரியர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் தான் நியமிக்கப்படுகின்றனர். அவ்வாறு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் கூட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள வட மாவட்டங்களில் பணிபுரியத் தயாராக இல்லை. வட மாவட்டங்களில் பணியாற்றத் தயாராக இருக்கும் உள்ளூர் பட்டதாரிகளுக்கு தமிழக அரசின் சமூக அநீதி காரணமாக ஆசிரியர் பணி கிடைப்பதில்லை. இந்த நிலையை மாற்ற அரசு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கானஒரேதீர்வு வட மாவட்டங்களை கல்வியில் பின்தங்கிய மண்டலமாக அறிவித்து, அந்த மண்டலத்திற்கான ஆசிரியர்கள் நியமனங்களில் மாவட்ட ஒதுக்கீட்டு முறையை செயல்படுத்துவது தான். இந்த முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டங்களைச்சேர்ந்தவர்களே பள்ளி ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என்பதால், அவர்கள் வேறு மாவட்டங்களுக்கு மாறுதல் பெற்றுச் செல்ல மாட்டார்கள். சொந்த மாவட்டம் என்பதால் கூடுதல் அக்கறையுடன் பணி செய்வார்கள். எனவே, வட மாவட்ட ஆசிரியர் நியமனத்தில் மாவட்ட ஒதுக்கீட்டை செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி திரவுபதி முர்முவுக்கு திமோர்லெஸ்தேவின் உயரிய விருது வழங்கி கவுரவம்



திலி, ஆக. 13

ஜனாதிபதி திரவுபதி முர்மு, திமோர்லெஸ்தே நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளார். அவர் அந்நாட்டின் ஜனாதிபதி ஜோஸ் ரமோஸ்ஹோர்தவை நேரில் சந்தித்து பேசினார். அப்போது முர்முவுக்கு ஜோஸ், நாட்டின் உயரிய கிராண்ட்காலர் ஆப் தி ஆர்டர் ஆப் திமோர்லெஸ்தே விருது வழங்கி கவுரவித்து உள்ளார்.

இந்த சந்திப்பின்போது, ஜோசிடம் முர்மு பேசும்போது, உலகம் முழுவதும் ஒரே குடும்பம் என இந்தியா கருதுகிறது. கடின உழைப்பு மற்றும் நம்பிக்கை தன்மை ஆகியவற்றிற்காக இந்தியர்களை ஒட்டுமொத்த உலகமும் ஏற்று கொண்டுள்ளது என முர்மு கூறியுள்ளார்.

இந்திய வம்சாவளியினர் ஒவ்வொரு துறையிலும் பங்கு பெறுகின்றனர். முன்னோர்களிடம் இருந்து கற்று கொள்ளுதலால், இந்தியர்கள் எல்லா இடத்திலும் ஏற்று கொள்ளப்படுகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

சமூகம் மற்றும் உலகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு பெண்களின் முன்னேற்றம் முக்கியம் எனவலியுறுத்திய முர்மு, பெண்கள்சுதந்திரத்துடன் செயல்பட சுயஉதவி குழுக்கள் எப்படி செயல்படுகின்றன? என்றும் அவர் சுட்டி காட்டி பேசியுள்ளார்.

தொடர்ந்து அவர், உலகில் 50 சதவீதம் பெண்கள் உள்ளனர். குடும்பம், சமூகம், தேசம் அல்லது உலகத்தின் முன்னேற்றத்திற்கு பெண்களின் முன்னேற்றம் முக்கியம்.

ஒரு காலத்தில் பெண்கள் வீட்டிலேயே இருந்தனர். ஆனால், இப்போது ஒவ்வொருவருக்கும் புரிதல் உள்ளது. அவர்கள் முன்னேற்றி செல்ல விரும்புகின்றனர். குடும்பம், சமூகம் மற்றும் நாட்டை முன்னெடுத்து செல்ல அவர்கள் விரும்புகின்றனர் என முர்மு கூறியுள்ளார்.

## பீகாரில் கனமழை: சட்டசபை, மந்திரிகளின் பங்களாக்களை சூழ்ந்த வெள்ள நீர்



பாட்னா, ஆக. 13

பீகாரில் பருவமழையை முன்னிட்டு தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால், தாழ்வான பகுதிகள், சட்டசபை மற்றும் அதில் இருந்து சில மீட்டர் தொலைவில் அமைந்துள்ள மந்திரிகளின் பங்களாக்கள் மற்றும் பல்வேறு மருத்துவமனைகள் உள்ளிட்ட பகுதிகளை சுற்றி வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

பாட்னா நகரில் 41.8 மி.மீ. மழை பெய்துள்ளது. ஸ்ட்ராண்ட் சாலை, ராஜ் பன்சி நகர், போரிங் சாலை, பெய்லி சாலை மற்றும் பாடலிபுத்ரா காலனி உள்ளிட்ட பகுதிகளில் வாகன போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

கனமழை மற்றும் வெள்ளம் ஆகியவற்றால் ஏற்பட்ட பாதிப்புகளை பார்வையிடுவதற்காக முதல்மந்திரி நிதிஷ் குமார் வெள்ளம் பாதித்த பல்வேறு பகுதிகளுக்கு இன்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இதேபோன்று, செப்டம்பர் 30ந்தேதி வரை மூத்த அதிகாரிகள் யாருக்கும் விடுமுறை கிடையாது என்றும் விடுமுறையில் உள்ளவர்கள் உடனடியாக பணிக்கு திரும்பவும் கேட்டு கொள்ளப்பட்டு உள்ளனர் என நகர வளர்ச்சி மற்றும் வீட்டு வசதி துறை மந்திரி நிதின் நபின் கூறியுள்ளார்.

எனினும், எச்சரிக்கை விடும் அளவுக்கு நிலைமை மோசமடையவில்லை என நீர்வள துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வயநாடு நிலச்சரிவு: 130 பேர் மாயம்; கேரள மந்திரி பேட்டி



வயநாடு, ஆக. 13

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் கடந்த மாதம் 30ந் தேதி பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் பூஞ்சிரித்தோடு, முண்டக்கை, சூரல்மலை, அட்டமலை ஆகிய கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதனை தொடர்ந்து, பலியானவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

நிலச்சரிவில் காயமடைந்த நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. காணாமல் போனவர்களை தேடும் பணி நடந்து வருகிறது. வயநாடு மாவட்டத்தில் மொத்தம் உள்ள 91 முகாம்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். வயநாடு பேரழிவை, மாநிலபேரிடராகஅறிவித்துகேரளஅரசுஅரசாணைவெளியிட்டுள்ளது.

தொடர்ந்து தேடுதல் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இந்நிலையில், வயநாட்டில் 3 உடல் பாகங்கள் இன்று கண்டெடுக்கப்பட்டு உள்ளன. 130 பேர் இன்னும் கண்டறியப்படவில்லை.

இதுபற்றி கேரள மந்திரி பி.ஏ. முகமது ரியாஸ் அளித்த பேட்டியின்போது, இதுவரை178உடல்கள்அடையாளம்காணப்பட்டு உள்ளன. 51 உடல்கள் அடையாளம் காணப்படாமல் உள்ளன. 130 பேர் காணாமல் போயுள்ளனர். தேடுதல் குழுவினர், உடல் அல்லது உடல்பாகங்களைதேடிகண்டறியும்முயற்சியில்சிறப்பாகசெயல்பட்டு வருகின்றனர். இன்று 3 உடல் பாகங்கள் கைப்பற்றப்பட்டு உள்ளன. பிரேத பரிசோதனைக்கு பின்னரே, அவை மனிதன் அல்லது விலங்கு இவற்றில் யாருடைய உடல்? என உறுதி செய்ய முடியும் என்று ரியாஸ் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறும்போது, 2 ஆயிரம் பேர் இன்று தேடுதல் பணியில்ஈடுபட்டனர்.சாலியார்ஆற்றில்நாளையும்,நாளைமறுநாளும் விரிவான தேடுதல் பணி நடைபெறும் என்று கூறியுள்ளார்.

# தென்காசி மாவட்டத்தில் தமிழ்ப்புதல்வன் திட்டம்



தென்காசி, ஆக 13

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் 6முதல் 12ம் வகுப்பு பயின்று, தொன்காசி மாவட்டத்திலுள்ள 50 கல்லூரி, தொழிற்கல்லூரிகளில் உயர்கல்வி பயிலும் சுமார் 4301 மாணாக்கர்களுக்கான "தமிழ்புதல்வன்" மாதாந்திர நிதிஉதவி வழங்கும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கமல்கிஷோர், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிநாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சதன்திருமலைக்குமார் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கிவைத்தார்கள். இந்நிகழ்வில் தென்காசி மாவட்ட திரு. இரா.சண்முகசுந்தரம், செய்தி மக்கள் மக்கள் உதவிதொடர்புதொடர்பு திரு. ரா.ராமசுப்பிரமணியன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அலுவலர் அலுவலர் அரசு அலுவலர்கள், ஆசிரய ஆசிரியைகள், மாணவர்கள் கலந்த கொண்டனர்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 20,505 கன அடியாக அதிகரிப்பு



சேலம், ஆக. 13

மேட்டூர் அணைக்கு வரும் நீர்வரத்து 20,505 கன அடியாக அதிகரித்துள்ளது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன்படி மேட்டூர் அணைக்கான நீர்வரத்து இன்று வினாடிக்கு 6,548 கன அடியில் இருந்து 20,505 கன அடியாக உயர்ந்துள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119.24 அடியில் இருந்து 119.65 அடியாக அதிகரித்துள்ளது. அணையில் தற்போது 92.91 டி.எம்.சி. அளவு நீர் இருப்பு உள்ளது. பாசன தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து 12,000 கனஅடி தண்ணீர் வெளியேற்றப் பட்டு வருகிறது.

# திருவாரூர் மாவட்டம் எடையூரில் மாபெரும் இரத்த தான முகாம்





திருவாரூர், ஆக. 13

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் எடையூர்கிராமத்தில் திருத்துறைப்பூண்டி நூற்றாண்டு அரிமா சங்கம் , திருத்துறைப்பூண்டி ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல், திருத்துறைப்பூண்டி ரத்த வங்கி , ஶ்ரீமதி சரோஜா ராகவன்ஜி நினைவு கழகம் ஆகியோர் இணைந்து புகழ் பெற்ற பூமிதான வள்ளலும், மகாத்மா காந்தி மற்றும் வினோபாவின் நேரடி மொழி பெயர்பாளரும், 66 ஏக்கர் நிலத்தை விநோபா பூமிதானத்திற்கு வழங்கி , ஏழைகளுக்காக வினோபா கிராமத்தை உருவாக்கிய பண்டிட் ராகவன்ஜி மனைவி ஸ்ரீமதி சரோஜா ராகவன்ஜி இயற்கை எய்தியதை முன்னிட்டு அவரது நினைவாக திருத்துறைப்பூண்டி வட்டம் எடையூரில் உள்ள ஸ்ரீராமு மஹாலில் மாபெரும் இரத்ததான முகாம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

திருத்துறைப்பூண்டி ரத்த வங்கியின் மூலம் 30 யூனிட்டுக்கு மேல் ரத்தம் சேகரிக்கப்பட்டு திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.இனி ஒவ்வொரு வருடமும் அவர்நினைவு தினத்தில் ரத்த தானம் செய்வதாக மறைந்த ஸ்ரீமதி சரோஜா குடும்பத்தினர் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். இந்த இரத்த தான முகாமை தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியும், முன்னாள் எம்.பி. ஏ கே எஸ் விஜயன் தொடங்கி வைத்தார்கள். திருத்துறைப்பூண்டி நூற்றாண்டு அரிமா சங்கத் தலைவர் அரிமா தங்கமணி முகாமிற்கு தலைமை தாங்கினார். ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனர் முனைவர் துரை ராயப்பன் அனைவரையும் வரவேற்றார்., செயலாளர் அரிமா ராஜ்மோகன் மற்றும் பொருளாளர் அரிமா நவீன் குமார் மற்றும் அரிமா அகல்யா மணிவண்ணன் ஆகியோர் அனைவருக்கும் நன்றி கூறினார்கள், திருத்துறைப்பூண்டி இரத்த வங்கி ஊழியர் ஜெயந்தி, திருவாரூர் இரத்த வங்கி மருத்துவர் இவாஞ்சலின், இரத்த வங்கி செவிலியர் சுதா லெட்சுமி, மருத்துவர் அஸ்வின், ஆகியோர் இரத்த தான முகாம் சிறப்பாக அமைய உதவினர். எடையூர் ஒன்றிய கவுன்சிலர் ந.உ.சி துரை அரசன், எடையூர் வர்த்தக சங்க தலைவர் ந.உ.சி மாதவன், பாரதமாதா நிறுவனர் முனைவர் எடையூர் மணிமாறன், பூமி தான வள்ளல் ராகவன்ஜி மகள்கள் ஆசிரியை இந்திரா, சித்ரா ,விமலா, பேரன்கள் வருண் ,சாய் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

எடையூர் பிரசிடென்ட் ராதிகா கணேஷ்குமார், சங்கேந்தி பிரசிடென்ட் ஏ.கே.ராஜா, முத்துப்பேட்டை ஒன்றிய செயலாளர் அமுதா மனோகரன், கவுன்சிலர் எஸ்.ஜி. முருகையன், சங்கேந்தி முன்னாள் கவுன்சிலர் தெட்சிணாமூர்த்தி, பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் சண்முகம், பொருளாளர் நாகராஜன், முன்னாள் பிரசிடென்ட் வீரையன், நல்லாசிரியர் புலவர் மணி, எடையூர் பள்ளி தலைமை ஆசிரியர் அமுத ராசு, உதவி தலைமை ஆசிரியர் பாக்கியராஜ் மற்றும் முன்னாள் , இந்நாள் ஆசிரிய ஆசிரியைகள், முன்னாள் இந்நாள் மாணவ மாணவிகள் மற்றும் திரளான ஊர் பொதுமக்கள் கலந்துக்கொண்டு அம்மையாருக்கு புகழஞ்சலியும், இரத்ததானத்திற்கு வாழ்த்துரையும் வழங்கினர். முகாம் இனிதே நிறைவு பெற்றது.

# குளிர்பானம் குடித்த 5 வயது சிறுமி திடீர் சாவு: திருவண்ணாமலையில் சோகம்

திருவண்ணாமலை, ஆக. 13

குளிர்பானம் குடித்த சிறிதுநேரத்தில்சிறுமிக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டு உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் தாலுகா தூசியை அடுத்த கனிகிலுப்பைக் கிராமம் ரோட்டுத் தெருவைச் சேர்ந்தவர் ராஜ்குமார், கூலி தொழிலாளி. இவரது 2வது மகள் காவ்யாஸ்ரீ (வயது 5).

இவள் அருகே உள்ள தொடக்கப் பள்ளியில் முதல் வகுப்பு படித்து வந்தாள்.

காவ்யாஸ்ரீ நேற்று அதே பகுதியில் உள்ள ஒரு கடையில் 10 ரூபாய் குளிர்பானம் வாங்கி வந்து குடித்ததாக கூறப்படுகிறது. குளிர்பானம் குடித்த சிறிது நேரத்தில் சிறுமிக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டு உள்ளது.

அதனைத்தொடர்ந்து மூக்கிலும், வாயிலும் நுரை தள்ளிய நிலையில் மயக்கம் அடைந்து கீழே விழுந்தாள்.

உடனடியாக பெற்றோர் சிறுமியை சிகிச்சைக்காக காஞ்சீபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி காவ்யாஸ்ரீ பரிதாபமாக உயிரிழந்தாள்.

இதுகுறித்து தூசி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பையும் சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# முன்விரோதம்: பள்ளி மாணவர்கள் மோதல்: தூத்துக்குடியில் பரபரப்பு

தூத்துக்குடி, ஆக. 13

தூத்துக்குடி பாளையங்கோட்டை சாலையில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் பிளஸ்2 படிக்கும் 2 மாணவர்களுக்குள் அடிக்கடி தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்துள்ளது. பள்ளியில் மட்டுமல்லாமல் டியூசனுக்கு செல்லும் வழியிலும் அவர்களுக்குள் மோதல் ஏற்பட்டுள்ளது.

இரவில் டியூசன் முடிந்து வரும் வழியில் அவர்களுக்குள் மீண்டும் மோதல் ஏற்பட்டது. இதையடுத்து 2 மாணவர்களும் தங்களது நண்பர்களான சக மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் என 12 பேரை அழைத்துக் கொண்டு இருதரப்பாக மோதிக்கொண்டனர்.

இதில் பிளஸ்2 மாணவர்களும் தாக்கப்பட்டனர். அவர்கள் 2 பேருக்கும் வாளால் வெட்டு விழுந்தது.

காயம் அடைந்த 2 பேரும் தூத்துக்குடி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் குறித்து காயமடைந்த ஒரு மாணவனின் தந்தை சிப்காட் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் 2 கல்லூரி மாணவர் உள்ளிட்ட 12 பேர் மீது கொலை முயற்சி, அவதூறாக பேசி, தாக்கி, கொலை மிரட்டல் விடுத்ததாகவும், வன்கொடுமை வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தூத்துக்குடி ரூரல் துணை போலீஸ் சூப்பிரண்டு ராஜசுந்தர் விசாரணை நடத்தி வருகிறார். தூத்துக்குடியில் மாணவர்கள் மோதலில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அம்பாசமுத்திரம் அருகே விபரீதம்: மகளை கிணற்றில் தள்ளி கொன்ற தாய் தற்கொலைக்கு முயன்ற போது கைது

தென்காசி, ஆக 13

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே உள்ள கல்லிடைக்குறிச்சியில் கிணற்றில் மகளை தள்ளிக் கொன்று விட்டு, அதே கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயன்ற தாய் உயிர் தப்பிய நிலையில் அவரை போலீசார் கைது செய்தனர்.

திருமணம் ஆகாமல் ஒரே வீட்டில் வாழ்ந்த கணவர் வேறொரு பெண்ணுடன் பழகியதால் இந்த விபரீதம் நடந்துள்ளது. நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் பகுதியைச் சேர்ந்த அரசு ஊழியர் ஒருவரும் ஜோதி (வயது 34) என்ற பெண்ணும் திருமணம் செய்து கொள்ளாமல், ஒரே வீட்டில் 'லிவிங் டுகெதர்' முறையில் தம்பதியாக வாழ்ந்து வந்தனர். இவர்களது மகள் ஆனி ரோஸ் (வயது 11). இவர் அங்குள்ள பள்ளியில் 6ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்நிலையில் அரசு ஊழியருக்கு வேறு ஒரு பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டது. இதுகுறித்து ஜோதி கேட்டதற்கு அவர் சரியாக பதில் கூறவில்லை.இதில் மனம் உடைந்த ஜோதி, மகள் ஆனிரோஸிடம்,

தந்தைக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு உள்ளது. அவர் இனி நம்மிடம் அன்பாக இருக்க மாட்டார். இதனால் நாம் இருவரும் கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வோம் என்று கூறி நேற்று முன் தினம் மதியம் வெளியே அழைத்துள்ளார்.

இதை யடுத்து 2 பேரும் கல்லிடைக்குறிச்சி பொன் மாநகரில் உள்ள கிணறு அருகே சென்றுள்ளனர். அங்கு கிணற்றில் குதிக்க மகள் தயங்கி நின்ற நிலையில் அவரை ஆனி ரோஸ் கிணற்றுக்குள் தள்ளிவிட்டார். அதன் பின்னர் அவரும் கிணற்றுக்குள் குதித்தார்.

சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் அங்கு ஓடி வந்தனர். அப்போது கிணற்றில் ஜோதி தத்தளித்துக் கொண்டிருந்தார். உடனே அம்பை தீயணைப்பு நிலையத்திற்கு அப்பகுதி மக்கள் தகவல் தெரிவித்தனர். தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள், சம்பவ இடத்திற்கு விரைந்துவந்துஜோதியை உயிருடன் மீட்டனர். ஆனால் ஆனிரோஸ் கிணற்றில் மூழ்கி இறந்துவிட்டார்அவரது உடலை தீயணைப்பு வீரர்கள் மீட்டனர்.

தகவலறிந்த கல்லிடைக்குறிச்சி இன்ஸ்பெக்டர் கலா, எஸ்ஐ ஆழ்வார் மற்றும் போலீசார்சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினர். கிணற்றில் மூழ்கி இறந்த ஆனி ரோஸின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக் காக, தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தாய் ஜோதி மீது கொலை வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்து ℓவிசாரணை நடத்தி வருகின்றனர்.இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மண் சரிந்த பூமியில் மனித நேய பயணம் 6 லட்சம் மதிப்புள்ள நிவாரண பொருட்கள்




மதுரை, ஆக. 13

மதுரை, சர்வதேசசட்ட உரிமைகள்மற்றும்மனித நீதி சபை அமைப்பின் மூலம் கேரளாவில் மண் சரிந்த வயநாட் பகுதிக்கு ஆறு லட்சம் மதிப்புள்ள நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது. இதில் அரிசி, சர்க்கரை, பருப்பு, பிஸ்கட், பிளாஸ்டிக் பொருட்கள், சில்வர் பிளேட் டம்ளர், சொட்டர் பெட்ஷீட் 4000 போர்வை தலையனை, குழந்தைகளுக்கு தேவையான ஆடைகள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தேவையான அனைத்து ஆடைகள், நாப்கின், மல்லிகை பொருட்கள், அத்தியாவசிய அனைத்து பொருட்களும் சர்வதேச சட்ட உரிமைகள் மற்றும் மனித நீதி சபை அமைப்பின் மூலம் தமிழ் நாட்டில் இருந்து கேரளா மாநிலத்திற்கு கண்டெய்னர் லாரியில் பொருள்களை ஏற்றி அமைப்பின் நிறுவனர் மற்றும் மாநில தலைவர் ராஜ்குமார் தலைமையில் சுமார் 6 லட்சம் மதிப்பீட்டில் நிவாரண பொருட்களை வழங்கினர். உடன் தேசிய செயலாளர் கார்த்தி, மாநில நிர்வாகிகள் ஜெயராமன், செந்தில் குமார் மாநில ஒருங்கிணைப்பாளர் நதீம் மற்றும் சிறப்புற பங்கு பெற்ற ஜெகதீஷ், சூலூர் ராஜ்குமார், தர்மராஜ், கேசவன், ராஜீவ் மேனன், ராஜேஷ், வினோத்குமார், பிரபு, ஜேம்ஸ், கலை கணேஷ் மற்றும் நிர்வாகிகள் வயநாட்டில் மண் சரிவால் பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரடியாக களத்தில் இறங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை அவர்களின் தேவைகளை கேட்டு கேட்டு மூலை முடுக்கெல்லாம் நேரடியாக சென்று வழங்கி உள்ளார்கள். இதற்காக அமைப்பின் கிளைகளாக உள்ள காஞ்சிபுரம், கோவை, சேலம், கரூர், மதுரை, திருவண்ணாமலை மற்றும் ஏனைய மாவட்டங்கள் மூலம் 6 லட்சம் மதிப்புள்ள நிவாரண பொருள்களை திரட்டி தலைமை இடமான கோவையில் இருந்து கேரளா வயநாட்டிற்கு நேரடியாக களத்தில் இறங்கி கொடுத்துள்ளனர். ஏற்கனவே கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட தூத்துக்குடி மற்றும் சென்னையில் 10 லட்சம் மதிப்புள்ள வெள்ள நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கலைஞர் நூற்றாண்டு விழா, திமுக இளைஞர் அணி 42 வது ஆண்டு விழா: திமுக வடக்கு இளைஞரணி சார்பில் அசைவ உணவு தெற்கு எம்எல்ஏ வழங்கினார்.



திருப்பூர், ஆக. 13

திருப்பூர்திமுக வடக்கு மாநகர இளைஞரணி சார்பாககலைஞர்நூற்றாண்டு விழாவும், இளைஞர் அணி 42 வது ஆண்டு விழாவை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாநகர இளைஞரணி அமைப்பாளர் முத்துக்குமார் அவர்கள் ஏற்பாட்டில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்ட செயலாளர் க. செல்வராஜ் அவர்கள் தலைமையில் பத்தாவது வார்டு ஆத்து பாளையம் ரோடு காமாட்சி அம்மன் மண்டபத்தில் பொதுமக்களுக்கு அசைவ பிரியாணி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தெற்கு மாநகர செயலாளர் டி கே டி.மு. நாகராசன், வடக்கு மாநகர செயலாளர், மரியாதைக்குரிய மேயர் ந.தினேஷ்குமார், பகுதி செயலாளர் கொ.ராமதாஸ், வடக்கு மாவட்ட வர்த்தக அணி நிர்வாகி மணி, மண்டல தலைவர் உமா மகேஸ்வரி, 10 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பிரேமலதா கோட்டா பாலு, மாமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன், சிவபாலன், பகுதி செயலாளர் உசேன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, வார்டு, இளைஞர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




வேலூர் மாவட்டத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையின் சார்பில் போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலெட்சுமி கோட்டை காந்தி சிலை அருகில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் செ.மணிமொழி, மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திருநாவுக்கரசு, உதவி ஆணையர் (கலால்) முருகன், வேலூர் வட்டாட்சியர் முரளிதரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர். பேரணிக்கு முன்னதாக சாரல் கலைக்குழு இசைக்கலைஞர்கள் பறைஇசை வாசித்து சென்றனர்.

# பார்பிக்யூ ஆசையால் பறிபோன உயிர்கள்... புகைமூட்டத்தால் மூச்சுத்திணறி இறந்தார்களா? போலீசார் விசாரணை



திண்டுக்கல், ஆக. 13

மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மட்டுமல்லாது இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தருகின்றனர்.

இந்நிலையில் திருச்சியை சேர்ந்த நண்பர்கள் 4 பேர் கொடைக்கானலுக்கு சுற்றுலா செல்ல முடிவு செய்தனர். அதன்படி நேற்று முன்தினம் பகல் முழுவதும் கொடைக்கானல் பகுதியில் பல்வேறு சுற்றுலா இடங்களை ரசித்து பார்த்த அவர்கள், இரவு தங்கும் விடுதிக்கு திரும்பினர். தங்கும் விடுதியின் ஒரு அறையில் நண்பர்களான ஜெயக்கண்ணன், ஆனந்த்பாபுவும், மற்றொரு அறையில் சிவசங்கர், அவரது தம்பி சிவராஜ் ஆகியோரும் தூங்கினர்.

இதில் இரவு பார்பிக்யூ சிக்கன் சமையல் முடித்து விட்டு அந்த அடுப்பினை அணைக்காமல் தங்களது அறையிலேயே குளிருக்காக அப்படியே விட்டு விட்டு உறங்கியதாக கூறப்படுகிறது.

இந்தசூழலில் நேற்று காலை ஜெயக்கண்ணன், ஆனந்த்பாபு ஆகியோர் தங்களது அறையில் இருந்து வெகுநேரமாகியும் எழுந்து வரவில்லை. இதனால் சந்தேகமடைந்த அவரது நண்பர்களான சிவசங்கரும், சிவராஜுவும் அறை கதவை திறந்து பார்த்தனர். அப்போது அங்கு ஒருவர் கட்டிலிலும், மற்றொருவர் தரையிலும் மயங்கிய நிலையில் கிடந்தனர்.

இதனால் அதிர்ச்சியடைந்த நண்பர்கள், உடனடியாக 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களுக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் மயங்கி கிடந்த 2 வாலிபர்களை பரிசோதனை செய்தனர். அப்போது 2 பேரும் ஏற்கனவே இறந்துபோனது தெரியவந்தது. இதுகுறித்து தகவல் அறிந்ததும் போலீசார் தங்கும் விடுதிக்கு வந்து விசாரணை நடத்தினர். மேலும் 2 வாலிபர்கள் தங்கியிருந்த அறையை சோதனை செய்தனர்.

அப்போது நேற்று இரவு அடுப்பு கரியை அணைக்காமல் அறையிலேயே வைக்கப்பட்டிருந்ததால் அவர்களுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு இறந்தது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனை தொடர்ந்து உயிரிழந்த அந்த இருவரையும் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் கொடைக்கானல் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு போலீசார் அனுப்பி வைத்தனர்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 24 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு



பென்னாகரம், ஆக. 13

கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ண ராஜ சாகர் அணைகள் நிரம்பியதை தொடர்ந்து 2 அணைகளில் இருந்தும் தமிழக காவிரி ஆற்றில் உபரி நீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. இதன்படி 2 அணைகளில் இருந்தும் காவிரி ஆற்றில் வினாடிக்கு 15 ஆயிரத்து 965 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இந்த தண்ணீர் தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு வருகிறது. இதற்கிடையே காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி வினாடிக்கு 19 ஆயிரம் கனஅடியாக இருந்தது. மாலையில் நீர்வரத்து வினாடிக்கு 22 ஆயிரம் கனஅடியாக அதிகரித்து இருந்தது.

இந்நிலையில் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து தற்போது 24 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் ஒகேனக்கல் பிலிகுண்டு காவிரி ஆற்றில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. பாதுகாப்பு காரணங்கள் கருதி 26வது நாளாக அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தொடர்ந்து தடை நீடிக்கிறது.

காவிரி ஆற்றில் வரும் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். நீர்வரத்து அதிகரித்துள்ளதால் ஒகேனக்கல் போலீசார், வருவாய்த்துறையினர், தீயணைப்பு மீட்பு படையினர் மற்றும் ஊர்க்காவல் படையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# திண்டுக்கல்லில் முன்விரோதம் காரணமாக இளைஞர் மீது துப்பாக்கிச்சூடு

திண்டுக்கல், ஆக. 13

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே, சிறுமலை வேளாம்பண்ணையை சேர்ந்தவர் சவேரியார். இவருக்கும், அதே பகுதியை சேர்ந்த வெள்ளையன் என்பவருக்கும் இடையே நிலம் தொடர்பாக முன்விரோதம் இருந்து உள்ளது.

இந்நிலையில் இன்று அதிகாலையில் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முத்திய நிலையில் ஆத்திரமடைந்த சவேரியார், தான் வைத்திருந்த நாட்டு துப்பாக்கியால் வெள்ளையனை சுட்டார். இதில் வெள்ளயனுக்கு கழுத்து, தோள்பட்டை, முதுகு உள்ளிட்ட பகுதிகளில் குண்டு பாய்ந்தது.

துப்பாக்கி சூட்டில் படுகாயமடைந்த வெள்ளையனை அக்கம் பக்கத்தினர் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சம்பவம் தொடர்பாக தலைமறைவான சவேரியார் மீது போலீசார் வழக்குபதிவு செய்து தீவிரமாக தேடி வருகின்றனர்.

# மணல் எடுக்க தோண்டிய பள்ளம்: சித்தப்பாவுடன் குளிக்க சென்ற மாணவி, நீரில் மூழ்கி பலி

அணைக்கட்டு, ஆக. 13

வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா அருகே கழனிப்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் கார்த்திகேயன், டாஸ்மாக் கடை ஊழியரான அவருக்கு இரு மகள்கள். இளைய மகள் திவ்யா (9) பசுமாத்தூரிலுள்ள தனியார் பள்ளியில் 3ஆம் வகுப்பு படித்து வந்தார்.

இந்த நிலையில் விடுமுறை நாளான நேற்று கார்த்திகேயனின் தம்பி சசிகுமார் தனது 2 மகள்களுடன் திவ்யா மற்றும் ஷகிலாவை கந்தனேரியில் உள்ள பாலாற்றுக்கு குளிப்பதற்காக அழைத்துச்சென்றார்.

மழை காரணமாக மணல் குவாரிக்காக தோண்டப்பட்ட பள்ளங்களில் தண்ணீர் நிரம்பி யிருந்ததால், அவர்களை கரையோரம் அமர வைத்துவிட்டு தண்ணீர் குறைவாக உள்ள பகுதியை பார்த்து வருவதாக சசிக்குமார் சென்றுள்ளார்.

அதற்குள் 4 சிறுமிகளும் ஆற்றுக்குள் இருந்த மணல் எடுக்க தோண்டிய சுமார் 10 அடி ஆழமுள்ள பள்ளத்தில் குளிப்பதற்காக இறங்கினர். அப்போது 4 பேரும் நீரில் மூழ்கி கூச்சலிட்டனர். உடனே அந்த பகுதியில் ஆடு மேய்த்துக்கொண்டு இருந்த மணிமேகலை என்ற பெண் ஓடிச்சென்று 4 சிறுமிகளையும் காப்பாற்ற ஆற்றில் குதித்தார். அவர் 3 சிறுமிகளை காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்தார். அதற்குள் சசிகுமார் ஓடிவந்து பார்த்து திவ்யா எங்கே என்று கேட்டார். அதற்கு திவ்யா, ஆற்றில் உள்ளார் என்று கூறியவுடன் அங்கிருந்து ஓடி சென்று திவ்யாவை தேடினார். அப்போது திவ்யாவை 10 அடி ஆழத்தில் மயங்கிய நிலையில் மீட்டார். பின்னர் மருத்துவமனைகு அழைத்துச்செல்லப்பட்ட திவ்யாவுக்கு உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லாததால் மேல் சிகிச்சைக்காக குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு டாக்டர்கள் பரிந்துரை செய்தனர். அதற்குள் திவ்யா இறந்து விட்டாள். தகவல் அறிந்த பள்ளிகொண்டா போலீசார் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனைக்கு சென்று டாக்டர்களிடம் விசாரணை நடத்தினர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கிரிக்கெட் விளையாடியபோது விபரீதம்; பந்தை எடுக்கச் சென்ற சிறுவன் மின்சாரம் தாக்கி பலி



புதுடெல்லி, ஆக. 13

தலைநகர் டெல்லியின் கோட்லா விகார் பகுதியில் உள்ள மைதானத்தில் நேற்று சிறுவர்கள் சிலர் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது, பந்து மைதானத்தின் ஓரத்தில் இருந்த இரும்பு போஸ்ட் கம்பத்தின் அருகே விழுந்துள்ளது.

அந்த பந்தை எடுப்பதற்காக சென்ற 13 வயது சிறுவன் மீது எதிர்பாராத விதமாக மின்சாரம் பாய்ந்தது. இதில் மயக்கமடைந்த சிறுவனை அங்கிருந்தவர்கள் உடனடியாக மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

ஆனால், சிறுவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நள்ளிரவில் பலத்த மழை: விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தை சூழ்ந்த மழைநீர்



விழுப்புரம், ஆக. 13

விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நள்ளிரவு பலத்த மழை பெய்தது.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக வடதமிழக மாவட்டங்களில் அனேக இடங்களிலும், தென்தமிழக உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் கனமழையும், பெரும்பாலான இடங்களில் கன மழை முதல் மிக கனமழையும் பெய்து வருகிறது.

இந்த நிலையில், விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நள்ளிரவு முதல் பலத்த இடி மின்னலுடன் பெய்த கனமழையால் புதிய பேருந்து நிலையத்தில் மழைநீர் சூழ்ந்துள்ளது. இதனால் பேருந்து நிலையத்துக்குள் செல்ல முடியாமல் பொதுமக்கள் அவதி அடைந்தனர். மழை நீரில் கழிவு நீர் கலந்ததால் பேருந்து நிலையம் குட்டை போல் மாறியது.

பேருந்து நிலையத்தில் தேங்கியுள்ள மழை நீரை அகற்றும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் விழுப்புரத்தில் 22 செ.மீ. மழை கொட்டித் தீர்த்துள்ளது.

# போட்டியில் தோல்வி: மாணவர்களை ஷூ கால்களால் எட்டி உதைத்த உடற்கல்வி ஆசிரியர்: அதிர்ச்சி வீடியோ



மேட்டூர், ஆக. 13

சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே கொளத்தூரில் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது.

இதில் கூடைப்பந்து போட்டியில் அந்த பள்ளியின் மாணவர்கள் தோற்றதாக கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த உடற்கல்வி ஆசிரியர் அண்ணாமலை, மாணவர்களை தரையில் அமர வைத்து தகாத வார்த்தைகளால் திட்டி ஷூ காலால் ஆவேசமாக எட்டி உதைத்து, கன்னத்தில் அறைந்துள்ளார். இதுதொடர்பான அதிர்ச்சிகர வீடியோ நேற்று சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.

இதனை செல்போனில் பார்த்த பெற்றோர் அதிர்ச்சிக்குள்ளாகி அந்த ஆசிரியர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பள்ளி கல்வித்துறைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வார விடுமுறை: கன்னியாகுமரியில் குவிந்த சுற்றுலா பயணிகள்



கன்னியாகுமரி, ஆக. 13

வார விடுமுறையையொட்டி கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர்.

சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். விடுமுறை நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வருவார்கள்.

இந்தநிலையில் இன்று ஞாயிறு விடுமுறையையொட்டி காலையில் இருந்தே கன்னியாகுமரியில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிய தொடங்கினர். அவர்கள் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரை, சன்ரைஸ் பாயின்ட் போன்ற பகுதிகளில் காத்திருந்து சூரிய உதயத்தை கண்டு ரசித்தனர்.

அதைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். படகுத்துறையில் இருந்து சுற்றுலா பயணிகள் கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை படகில் சென்று பார்த்து ரசித்து வருகின்றனர்.

காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், சுனாமி நினைவுப் பூங்கா, கடற்கரை சாலையில் உள்ள தமிழன்னை பூங்கா, சன்செட் பாயிண்ட், அரசு அருங்காட்சியகம், சுற்றுச்சூழல் பூங்கா உள்பட அனைத்து இடங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக உள்ளது.

கடற்கரையில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக இருந்ததால் போலீசாரும், கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும், சுற்றுலா பாதுகாவலர்களும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# போதைப் பொருட்கள் விற்பனை செய்த 17 ஆயிரம் கடைகளுக்கு சீல்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



ஈரோடு, ஆக. 13

ஈரோட்டில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு மருத்துவ கட்டமைப்பு தொடங்கப்பட்டது. 15 ஆரம்ப சுகாதாரநிலையத்தில் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டது. சத்தியமங்கலத்தில் ரூ.15 லட்சம் மதிப்பில் சித்த மருத்துவ பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. பவானி அரசு மருத்துவமனையில் 1 கோடி ரூபாய் மதிப்பில் மருத்துவ கட்டிடம் கட்டப்பட்டது.

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் போதைப் பொருட்கள் நடமாட்டத்திற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையில், இதுவரை 8 லட்சத்து 66 ஆயிரத்து 619 கடைகளில் ஆய்வு செய்யப்பட்டு, 32 ஆயிரத்து 404 கடைகளில் குட்கா பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டது. அந்த கடைகளில் இருந்து ரூ.20 கோடியே 91 லட்சத்து 19 ஆயிரத்து 468 ரூபாய் மதிப்பிலான 2 லட்சத்து 86 ஆயிரத்து 681 கிலோ எடையுள்ள குட்கா பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், போதைப் பொருட்களை விற்பனை செய்ததாக 17 ஆயிரத்து 481 கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டதோடு, 33 கோடியே 28 லட்சத்து 13 ஆயிரத்து 600 ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது .

இவ்வாறு அவர் கூறினார்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
13.8.2024

## 'தங்கலான்' படத்தின் "அறுவடை" பாடல் வெளியீடு




இயக்குனர் பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'தங்கலான்'. இந்த படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஞானவேல் ராஜா தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார்.

இந்த படம் கர்நாடக மாநிலத்தில் உள்ள கோலார் தங்க வயல் குறித்த கதை என்று இயக்குனர் பா.ரஞ்சித் தெரிவித்திருந்தார். இதனால் இந்த படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், விக்ரமின் தோற்றம் மற்றும் மிரட்டலான நடிப்பு உள்ளிட்டவை ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் இந்த படத்தின் டீசர் மற்றும் டிரெய்லர் வெளியாகி கவனம் பெற்றது.

இந்த நிலையில், 'தங்கலான்' படத்தின் 3வது பாடலான 'அறுவடை' லிரிக் வீடியோ தற்போது வெளியாகியுள்ளது.

## கொட்டுக்காளி படத்தின் டிரெய்லர் அப்டேட்




நடிகர்சிவகார்த்திகேயன்தமிழ்சினிமாவில்தயாரிப்பாளராகவும் உருவெடுத்து பல படங்களை தனது எஸ்கே புரோடக்சன்ஸ் நிறுவனத்தின் மூலம் தயாரித்து வருகிறார். அந்த வகையில் சூரி நடிப்பில் உருவாகியுள்ள கொட்டுக்காளி எனும் திரைப்படத்தையும் சிவகார்த்திகேயன் தயாரித்திருக்கிறார். இந்த படத்தை கூழாங்கல் படத்தின் இயக்குனர் பி எஸ் வினோத் ராஜ் இயக்கியுள்ளார்.

இதில் சூரியுடன் இணைந்து அன்னா பென் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். சூரி இந்த படத்தில் எதிர்மறை கதாபாத்திரத்தில்நடித்துள்ளதாகசொல்லப்படுகிறது.அதேசமயம் இந்த படமானது ரிலீஸுக்கு முன்பே பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பார்வையாளர்களிடம் பாராட்டுகளை பெற்றது.

திரைப்படத்தில் இவர்கள் நடித்த கதாப்பாத்திரமான பாண்டி மற்றும் மீனா பற்றிய பதிவுகளை சில நாட்களுக்கு முன் சமூகவலைத்தளங்களில் பதிவிட்டனர். படத்தின் புரோமோசன் பணிகள் தற்பொழுது நடைப்பெற்று வருகிறது.

இந்நிலையில், சூரி நடித்த 'கொட்டுக்காளி' படத்தின் டிரெய்லர் ரிலீஸ் குறித்த அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. படத்தின் டிரெய்லர் நாளை காலை 11 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளனர்.

சூரி, அன்னா பென் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகி உள்ள 'கொட்டுக்காளி' திரைப்படம், வருகிற 23ம் தேதி திரைக்கு வரவுள்ளது.

## கங்குவா படத்தின் டிரெய்லர் வெளியானது




இயக்குனர் சிவா இயக்கத்தில் சூர்யா நடித்துள்ள திரைப்படம் 'கங்குவா'. ஸ்டுடியோ கிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்தில் திஷா பதானி, பாபி தியோல், யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார்.

3டி முறையில் சரித்திர படமாக உருவாகியுள்ள 'கங்குவா' திரைப்படம் 10 மொழிகளில் வெளியாக உள்ளது. 'கங்குவா' படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்த நிலையில், தற்போது போஸ்ட் புரொடக்சன் பணிகள் நடந்து வருகின்றன. 'கங்குவா' திரைப்படம் வருகிற அக்டோபர் மாதம் 10ந்தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. நடிகர் சூர்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு இந்த படத்தின் முதல் பாடல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில், இயக்குநர் சிவாவின் பிறந்தநாளை முன்னிட்டு கங்குவா டிரெய்லரை இன்று வெளியிட்டுள்ளனர். வனத்திற்குள் வாழ்ந்த பழங்கால மனிதர்கள், அவர்களின் தோற்றம், போர்க்காட்சிகள் என பல இடங்களில் அனிமேஷன் மற்றும் விஎப்எக்ஸ் பணிகள் சிறப்பாக வந்திருக்கின்றன. தேவி ஸ்ரீ பிரசாத்தின் பின்னணி இசையும் வரவேற்பைப் பெறும் எனத் தெரிகிறது.

## மகாராஜா பட இயக்குனரின் படத்தில் நயன்தாரா





குரங்கு பொம்மை படத்தை இயக்கிய நிதிலன் சுவாமிநாதன், நடிகர் விஜய் சேதுபதியை வைத்து இயக்கிய திரைப்படம் 'மகாராஜா'. இப்படத்தை சுதன் சுந்தரம் மற்றும் ஜெகதீஷ் பழனிச்சாமி இணைந்து தயாரித்துள்ளனர். இத்திரைப்படம் கடந்த ஜூன் 14ம் தேதி வெளியானது. வெளியான முதல் நாளிலிருந்தே மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று வந்தது. விஜய் சேதுபதியின் 50 வது திரைப்படமான இந்தப் படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றதோடு, கதாநாயகனாக விஜய் சேதுபதிக்கும் ஒரு நல்ல கம்பேக் திரைப்படமாக அமைந்தது. இந்த படத்தில் அனுராக் காஷ்யப், மம்தா மோகன்தாஸ், நட்டி, முனிஷ்காந்த், சிங்கம் புலி, பாரதிராஜா, வினோத் சாகர், பி.எல். தேனப்பன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

பெண் பிள்ளைகளுக்கு எதிராக நடக்கும் பாலியல் ரீதியான வன்கொடுமையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம் மக்களின் வரவேற்பை பெற்றது. ஒரு சாதாரண கதையை நிதிலன் அவரது நான் லீனியர் திரைக்கதை யுக்தியால் படத்தை சுவாரசியமாகவும், விறுவிறுப்பாகவும் இயக்கி மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்தார். இதன் எதிரொலியால், படத்தின் வசூல் ரூ.100 கோடியை தாண்டியது. திரை வெற்றியைத் தொடர்ந்து ஓ.டி.டி.யிலும் மக்களின் வரவேற்பை பெற்றது.

திரைபிரபலங்கள்பலரும் இந்தப்படத்தை பாராட்டி வந்தனர். சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் இப்படத்தின் இயக்குனர் நித்திலன் சாமிநாதனை நேரில் அழைத்து பாராட்டியுள்ளார்.

மகாராஜா படம் மூலம் பெரிய உச்சத்திற்கு சென்ற இயக்குனர் நித்திலன், அடுத்ததாக யாரை இயக்குவார் என்கிற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.இந்த நிலையில், பெண் கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் உள்ள கதையை நித்திலன் இயக்க திட்டமிட்டுள்ளதாகவும் இதில் நாயகியாக நடிகை நயன்தாரா நடிக்க உள்ளதாகவும் புதிய தகவல் வெளியாகியிருந்தது. தற்போது, இக்கூட்டணி இணைவது உறுதியாகியுள்ளதாம். இதனை, பேஷன் ஸ்டூடியோஸ் நிறுவனம் தயாரிக்க, படத்திற்கு மகாராணி எனப் பெயரிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது

## புதிய சாதனை படைத்த டெட்பூல் & வோல்வரின் திரைப்படம்.. உலக அளவில் ரூ.8,000 கோடி வசூல்

'டெட்பூல் & வோல்வரின்' படம் உலகளவில் வெளியாகி, உலக அளவில் வசூலில் சாதனை படைத்துள்ளது.

மார்வெல் படங்களுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். குறிப்பாக, அவெஞ்சர்ஸ் படம் அனைவருக்கும் பிடித்த படமாக உள்ளது. அதில் வரும் ஹீரோக்களுக்கும் உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். அயர்ன் மேன், ஹல்க், தோர், ஸ்பைடர் மேன், கேப்டன் அமெரிக்கா, நடாசா உள்ளிட்ட கதாபாத்திரங்களுக்கு இணையாக வோல்வரின் மற்றும் டெட்பூல் கதாபாத்திரங்களுக்கும் ரசிகர்கள் உள்ளனர்.

தற்போது, வோல்வரின் மற்றும் டெட்பூல் பாத்திரங்களை ஒன்றிணைத்து 'டெட்பூல் & வோல்வரின்' என்ற படம் உருவாகியுள்ளது. இது இதற்கு முன்னதாக வந்த டெட்பூல் மற்றும் டெட்பூல் 2 ஆகிய படங்களின் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டுள்ளது.

இப்படம் கடந்த 26ந் தேதி இந்தியாவில் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் வெளியானது. ரசிகர்களை இப்படம் வெகுவாக கவர்ந்து வசூலை அள்ளியுள்ளது. அதன்படி, இப்படம் ரூ.115.50 கோடி வசூலித்துள்ளது.




இந்தநிலையில், 'டெட்பூல் & வோல்வரின்' பாக்ஸ் ஆபிஸில் சாதனை செய்துள்ளது. ரியான் ரெனால்ட் மற்றும் ஹக் ஜேக்மேன் நடித்துள்ள இப்படம் ரூ.8000 கோடி வசூல் செய்து பாக்ஸ் ஆபிஸில் புயலை கிளப்பியுள்ளது. இது 2024ம் ஆண்டில் வெளியான படங்களில் ஆரம்பத்திலேயே அதிக வசூலை பெற்ற படம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

இந்தநிலையில், 'டெட்பூல் & வோல்வரின்' பாக்ஸ் ஆபிஸில் சாதனை செய்துள்ளது.

அதன்படி, இந்தியாவில் அதிகம் வசூலித்த மார்வெல் படங்களின் டாப் 5 பட்டியலுக்குள் நுழைந்திருக்கிறது. இதற்கு முன்னதாக 5வது இடத்தில் இருந்த தோர்: லவ் அண்ட் தண்டரை முந்தி 'டெட்பூல் & வோல்வரின்' இந்த சாதனையை படைத்துள்ளது.

## நேஷனல் பேங்க் ஓபன் டென்னிஸ்: ஆண்ட்ரி ரூப்லெவ் இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



கனடாவின் டொரண்டோவில் நேஷனல் பேங்க் ஓபன் டென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ரஷியாவின் ஆண்ட்ரி ரூப்லெவ், இத்தாலியின் மேட்டியோ அர்னால்டி உடன் மோதினார். இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ரூப்லெவ் 64 மற்றும் 62 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

## துலீப் டிராபி டெஸ்ட் தொடரில் களமிறங்கும் விராட், ரோகித்..? வெளியான தகவல்

இந்திய அணி அடுத்து வங்காளதேசத்துக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. செப்டம்பர் 19ம் தேதி அன்று சென்னை சேப்பாக்கத்தில் அந்த தொடரின் முதல் போட்டி தொடங்க உள்ளது. அந்தப் போட்டிக்கு முன் இந்திய வீரர்கள் அனைவரும் நிச்சயமாக உள்ளூர் டெஸ்ட் தொடரான துலீப் டிராபியில் விளையாட வேண்டும் என பயிற்சியாளர் கவுதம் கம்பீர் வலியுறுத்தி இருப்பதாக கூறப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் அணியின் மூத்த வீரர்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பே உள்ளூர் போட்டிகளில் ஆடுவதை நிறுத்திவிட்டனர். அவர்கள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் மட்டுமே கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதற்கு முன் ரவி சாஸ்திரி மற்றும் ராகுல் டிராவிட் இந்திய அணியின் பயிற்சியாளர்களாக இருந்தபோது ரோகித் சர்மா மற்றும் விராட் கோலியை உள்ளூர் போட்டிகளில் ஆடுமாறு கூறியதில்லை. ஆனால், தற்போது பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருக்கும் கவுதம் கம்பீர் அனைத்து இந்தியர்களையும் உள்ளூர் போட்டிகளில் ஆடுமாறு கூறி இருக்கிறார்.




இதனையடுத்து துலீப் டிராபியில் விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா விளையாட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா ஆகியோரை தவிர்த்து சுப்மன் கில், ரவீந்திர ஜடேஜா, கே எல் ராகுல், அக்சர் படேல், யஷஸ்வி ஜெய்ஸ்வால், குல்தீப் யாதவ் போன்ற வீரர்களும் துலீப் டிராபி தொடரில் விளையாட உள்ளதாக கூறப்படுகிறது.

## தென் ஆப்பிரிக்கா வெஸ்ட் இண்டீஸ் முதலாவது டெஸ்ட் டிரா: டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளி பட்டியலில் ஏற்பட்ட மாற்றம் என்ன..?




வெஸ்ட் இண்டீசுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று நிறைவடைந்தது. இந்த போட்டி சமனில் முடிவடைந்தது.

இந்நிலையில் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது. இதில் அணிகள் மாற்றமின்றி அதே வரிசையில் தொடருகின்றன. வெஸ்ட் இண்டீஸ் மற்றும் தென் ஆப்பிரிக்க அணிகள் கூடுதலாக புள்ளிகள் பெற்ற நிலையில் அதே இடத்தில் நீடிக்கின்றன.

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியல்:

1. இந்தியா 68.52 சதவீதம் 2. ஆஸ்திரேலியா 62.50 சதவீதம் 3. நியூசிலாந்து 50.00 சதவீதம் 4. இலங்கை 50.00 சதவீதம் 5. பாகிஸ்தான் 36.66 சதவீதம் 6. இங்கிலாந்து 36.54 சதவீதம் 7. தென் ஆப்பிரிக்கா 26.57 சதவீதம் 8. வங்காளதேசம் 25.00 சதவீதம் 9. வெஸ்ட் இண்டீஸ் 20.83 சதவீதம்

## ஐ.சி.சி. ஜூலை மாத சிறந்த வீரராக இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் தேர்வு

சர்வதேசகிரிக்கெட்கவுன்சில்(ஐ.சி.சி)ஒவ்வொருமாதமும்சிறந்தகிரிக்கெட்வீரர்மற்றும்வீராங்கனையை தேர்வு செய்து கவுரவித்து வருகிறது. அதன்படி ஜூலை மாதத்திற்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்ய தலா 3 வீரர் மற்றும் வீராங்கனைகளை ஐ.சி.சி அறிவித்துள்ளது.

அதன்படி ஜூலை மாதத்திற்கான சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் இங்கிலாந்தின் கஸ் அட்கின்சன், ஸ்காட்லாந்தின் சார்லி கேசல் மற்றும் இந்திய ஆல்ரவுண்டரான வாஷிங்டன்சுந்தர்ஆகியோர்இடம்பெற்றிருந்தனர்.

இவர்களில் ஜூலை மாத சிறந்த வீரராக இங்கிலாந்தை சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் கஸ் அட்கின்சன் தேர்வாகியுள்ளார்.




அதேபோல் ஜூலை மாதத்திற்கான சிறந்த வீராங்கனை விருதுக்கான பரிந்துரைபெயர்பட்டியலில் மகளிர் ஆசிய கோப்பை தொடரில் சிறப்பாக செயல்பட்ட இலங்கை கேப்டன் சமாரி அத்தபத்து, இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா மற்றும் ஷபாலி வர்மா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.



**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று**

**விளக்கம்:**

ஒருதுறையில்முற்பட்டுத்தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும், அத்தகைய சிறப்புஇல்லாதவர்அங்குத்தோன்றுவதைவிடத் தோன்றாமலிருப்பதே நல்லது.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 12002852826
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.